**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

**Case No: CC. 243/2021**

**Proseuction Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : உதயராஜன் | Caste | : |
| Father 's Name | : ராதாகிருஷ்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**21.06.2023**

**முதல் விசாரணை**

நான் சிவகாசியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன அருண் எனது நண்பர் ஆவார். கடந்த 12.01.2016 அன்று காலை 7.40 மணியளவில் மதுரை ரிங்ரோட்டில் சம்பவயிடம் தற்சமயம் நினைவு இல்லை. அருண் யமகா இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து மதுரைக்கு சென்று கொண்டிருந்த போது எங்களுக்கு எதிர்புறத்தில் வந்த டாங்கர் லாரியானது எதிர்புறத்தில் தனக்கு முன்னால் சென்ற வண்டியை முந்த முயலும் போது நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் அருணுக்கு நெற்றிபொட்டில் காயம் ஏற்பட்டது. இரண்டு கால்களும் உடைந்துவிட்டது. எனக்கும் இ,ரண்டு கால்களும் உடைந்து விட்டது. எனது தாடை உடைந்து விட்டது. எனக்கு வலது கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. அருண் மயங்கிய நிலையில் இருந்தார். எனக்கு சிறிது நிதானம் இருந்தது. விபத்து பற்றி எனது அண்ணனுக்கு தகவல் சொல்லிவிட்டு அருணின் அப்பாவிற்கு தகவல் சொன்னேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியவில்லை. ஆம்புலன்சு மூலமாக எங்களை லட்சுமணா மருத்துவமனையில் சேர்த்தார்கள். மேற்படி மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்ததால் அருண் இறந்தது குறித்து யாரும் எனக்கு தகவல் சொல்லவில்லை. ஒரு மாதம் கழித்து தான் அவர் இறந்துவிட்டது எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

**எதிரி தரப்பில் கு.வி.**

விபத்து ஏற்பட்ட பிறகு எப்போது சுயநினைவு வந்தது என்றால் 15 நாட்கள் கழித்து வந்தது. அதற்கு இடையே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து பகுதி வளைவான இடம் என்றால் சரிதான். அது இருவழிச்சாலை என்றால் சரிதான். நாங்கள் மெதுவாக தான் சென்றோம். ரோட்டின் மையபகுதியில் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மையபகுதிக்கு

இடது பக்கமாக நடந்தது. ரோட்டின் இடது புறம் நடைபெறவில்லை. வெள்ளைக்கோட்டிற்கு அருகே என்றால் சரிதான். லாரி வருவதை கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. கவனித்து வாகனத்தை மெதுவாக தான் ஓட்டினோம். லாரி வேறு ஒரு வாகனத்தை முந்த உள்ளே வந்து விட்டது. நாங்கள் சென்ற பாதையில் இடது ஓரமாக சென்றால் விபத்து நடைபெற்று இருக்காது என்றால் சரியல்ல. நாங்கள் வேறு ஏதேனும் வாகனத்தை முந்தி சென்றோமா என்றால் இல்லை. ஆனால் மத்தியில் உள்ள வெள்ளைக்கோட்டை ஒட்டி சென்றோம். வளைவு பகுதி என்பதால் லாரி ஏறி வரும் போது தான் கவனித்தோம். ஆனால் நாங்கள் வாகனத்தை கண்ட்ரோல் செய்துவிட்டோம். லாரி வேகமாக வந்து மோதிவிட்டது. வளைவு பகுதியில் இருசக்கர வாகனத்தை அருண் என்பவர் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வேகமாக ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் லாரியின் வலது பக்கவாட்டு பகுதியில் புகை போக்கி குழாயில் பின்பக்கம் மோதி விபத்து ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. லாரியின் முன்வலது பக்கத்தில் நேராக தான் மோதி விபத்து ஏற்பட்டது. லாரிக்கு முன்புறம் சேதாரம் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. இந்த விபத்து லாரியின் ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு போதியஇடவசதி இருந்தும் வலதுபக்கம் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்ததற்கு காரணம் வேகத்தை கட்டுப்படுத்த முடியாது என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 243/2021**

**Proseuction Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜு | Caste | : |
| Father 's Name | : கோவிந்தன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**21.06.2023**

**முதல் விசாரணை**

நான் சிவகாசியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்சமயம் கூனம்பட்டி பஞ்சாயத்து தலைவராக உள்ளேன். நான் BSNL ல் பணி செய்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். வழக்கில் இறந்து போன அருண் எனது உறவினர் ஆவார். அருணின் அப்பா ராஜைய்யா என்பவரும் என்னுடன் BSNL ல் பணி செய்து வந்தார். கடந்த 12.01.2016 அன்று காலை 8.00 மணியளவில் அருணின் அப்பா எனக்கு போன் செய்து அருனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் கூறினார். கப்பலுருக்கு மதுரை ரிங்ரோட்டில் இடம் தற்சமயம் நினைவு இல்லை. வளைவு பகுதியில் விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். பின்பு நாங்கள் அனைவரும் லட்சுமணா மருத்துவமனையில் சென்று பார்த்தோம். அருண் தீவிர சிகிச்சைபிரிவில் இருந்தார். அதே விபத்தில் அருனுடன் சென்ற உதயராஜ் என்பவரும் அடிபட்டு தீவிர சிகிச்சை பிரிவில் இருந்தார். விபத்து ஏற்படுத்திய டேங்கர் லாரி டிஎன் 69 ஏஎப் 6939 என தெரிந்து கொண்டேன். வழக்கு சம்மந்தமாக அருணின் அப்பா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி**

காலை 8.30 மணிக்கு எனக்கு தகவல்தெரிந்தது. சம்பவம் எப்போது நடந்தது என்று எனக்கு தெரியாது. நானும் புகார் கொடுத்த அ.சா.1 ம் சேர்ந்து லட்சுமணா மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு தான் அருண் என்பவரை பார்த்தோம்.